இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
வெள்ளிக்கிழமை 24.07.2026

கீழ்வெண்மணியும் கீழ்த்தரமான விமர்சனமும்!

சாகித்ய அகாடமி விருது பெற்ற எழுத்தாளரும், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைச் சார்ந்தவருமான ச.தமிழ்ச்செல்வன், கீழ்வெண்மணிக் கொடூரம் குறித்து ஆற்றிய உரையில் தந்தை பெரியாரையும், தலைவர் கலைஞரையும் மிகக் கீழ்த்தரமான விமர்சனத்தைச் செய்துள்ளார்.

1968 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 25 ஆம் நாளன்று கீழ்வெண்மணியில் 44 உயிர்கள் கொடூரமாகக் கொல்லப்பட்டன. கூலி உயர்வு கேட்டார்கள் என்ற காரணத்துக்காக பண்ணையார்களால் பூட்டிய வீட்டுக்குள் தீ வைத்து கொளுத்தப்பட்டன அந்த உயிர்கள். இதேபோல் தஞ்சை மாவட்டத்தில் நடைபெற்ற விவசாயப் போராட்டங்களைத் தொகுத்து 'திருப்பி அடித்த வரலாறு' என்ற பெயரில் புத்தகமாக எழுதி இருக்கிறார் ச.தமிழ்ச்செல்வன். அந்த நூல் குறித்த நிகழ்ச்சியில் உரையாற்றும் போது ஆய்வு நோக்கமோ, ஆராய்ச்சிக் கருத்துக்களோ இல்லாமல் கிண்டல், நக்கல் தொனியில் பெரியாரைப் பற்றிச் சொல்லி இருக்கிறார் ச.தமிழ்ச்செல்வன்.

கீழ்வெண்மணி கொடூரம் தொடர்பாக பெரியார் வெளியிட்ட அறிக்கையை முழுமையாக உள்வாங்காமல் மேலோட்டமாகப் படித்து விட்டுப் பேசி இருக்கிறார் ச.தமிழ்ச்செல்வன். அப்போது பெரியாருக்கு ৯০ வயது. அன்றைய தேதியில் உடல்நலக் குறைவு காரணமாக சென்னை பொது மருத்துவமனையில் இருந்தார். ஐந்து நாட்கள் கழித்துதான் மருத்துவமனையில் இருந்து வந்தார். மருத்துவமனையில் இருந்தபடியே தான் அந்த அறிக்கையை எழுதினார்.

காந்தி கொலை, காமராசரை வீட்டுக்குள் வைத்து கொளுத்த முயற்சித்தது போன்ற வன்முறைக்கு இணையானது கீழ்வெண்மணி சம்பவம் என்று பெரியார் சொல்கிறார். இதுபோன்ற சட்டவிரோத, பலாத்கார நாச வேலைகளை இன்றைய சட்டங்கள், நீதிமன்றங்கள், ஜனநாயக அமைப்பு முறைகள் மூலமாகத் தீர்க்க முடியாது என்கிறார் பெரியார். அரசும், போலீசும், சட்டமும், நீதிமன்றங்களும் யாருக்கு சார்பாக இருக்கும் என்பது தான் பெரியார் எழுப்பும் கேள்வி ஆகும். குற்றம் சாட்டப்பட்டவர்களை நீதிமன்றம் விடுதலை செய்ததை வைத்துப் பார்த்தால் பெரியார் அறிக்கையின் உண்மையான பொருள் புரியும்.

கீழ்வெண்மணி கொடூரம் குறித்து 'விடுதலை' நாளிதழில் தொடர்ச்சியாக செய்தி வெளியிட்டு வந்தார் பெரியார். அதைத் தெரிந்து கொள்ளாமல் பெரியாரை 'மடத்தனம்' என்பதுதான் மடத்தனம் ஆகும்.

'திராவிட இயக்கம் குறித்த ஓர் ஆவணம்' என்ற தலைப்பில் 1951 இல் கம்யூனிஸ்ட் கட்சிக்குள் ஒரு அறிக்கை தயாரிக்கப்பட்டது. இதை தமிழ்ச்செல்வன் போன்றவர்கள் பார்க்கவும். சமூக சீர்திருத்தக் கொள்கைக்குள் நிலப்பிரபுத்துவ எதிர்ப்பும் ஜனநாயக உள்ளடக்கமும் உண்டு என்கிறது அந்த அறிக்கை. இதனை ஆதரித்து பி.ஆர்.பரமேஸ்வரனும், நல்லசிவமும் பிற்காலத்தில் எழுதி இருக்கிறார்கள்.

"நான் பெரியாரையும் அண்ணாவையும் சந்திக்காமல் போயிருந்தால் கம்யூனிஸ்ட் ஆகியிருப்பேன் என்று சொன்னவர் கலைஞர். அந்தக் கம்யூனிஸ்ட் (கலைஞர்) ஆட்சிக்கு வந்துவிட்டார். அவர் தான் பக்கிரிசாமியை சுட்டுக் கொன்றார்" என்கிறார் ச.தமிழ்ச்செல்வன். கீழ்வெண்மணி சம்பவம் நடந்தபோது முதலமைச்சராக இருந்தவர் பேரறிஞர் அண்ணா. இது கூடத் தெரியவில்லை அவருக்கு.

புற்றுநோயால் தனது வாழ்க்கையின் இறுதிப்பகுதியில் இருந்தார் முதலமைச்சர் அண்ணா. இரண்டு மாதத்தில் மறைந்தார் அண்ணா. எத்தகைய சூழ்நிலையில் அண்ணா இருந்தார் என்பதும் முக்கியமானது. கீழ்வெண்மணிக்கு பொதுப்பணித்துறை அமைச்சர் கலைஞரை அனுப்பி வைத்தார். அவர் வரும் வரை காத்திருந்தார். இரவு 12 மணிக்கு கலைஞர் உள்ளிட்ட அமைச்சர்கள் வந்தார்கள். அவர்களிடம் பேசிவிட்டு நள்ளிரவு 1.30 மணிக்கு நிருபர்களைச் சந்தித்தார் அண்ணா.

இது தொடர்பான விவாதம் நாடாளுமன்றத்தில் வந்த போது உரையாற்றிய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் பி.ராமமூர்த்தி அவர்கள், "அந்த நிமிடமே அண்ணா கண்ணீர் விட்டார். மறுநிமிடமே அந்தச் சம்பவத்தைக் கடுமையாகக் கண்டித்தார். அதற்குப் பொறுப்பானவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என அறிக்கைவிட்டார். அவர் உடல் நலமற்று இருந்ததால் அமைச்சர்களை உடனே வெண்மணிக்கு அனுப்பி நிலைமைகளை அறிந்து வரச் செய்தார்" என்று பேசி இருக்கிறார். விசாரணை ஆணையம் வேண்டாம், கொலை வழக்காகப் பதிவு செய்யுங்கள் என்று முதல்வர் அண்ணாவிடம் சொன்னதும் பி.ராமமூர்த்தி அவர்கள் தான்.

1969 பிப்ரவரி 3 அன்று முதலமைச்சர் அண்ணா அவர்கள் மறைந்தார்கள். முதலமைச்சராக கலைஞர் அவர்கள் பொறுப்பேற்றார். 1969 ஜனவரி 27, பிப்ரவரி 25, 28 ஆகிய நாட்களில் தமிழ்நாடு சட்டமன்றத்தில் கீழ்வெண்மணி தொடர்பான விவாதம் நடைபெற்றது. 28.2.1969 அன்று விவாதங்களுக்கு பதிலளித்து முதலமைச்சர் கலைஞர் பேசினார். மிராசுதார் கோபாலகிருஷ்ணனை 'கொடும்பாவி' என்று குறிப்பிட்டார் முதலமைச்சர் கலைஞர்.

1969 சனவரி 10 அரசு, விவசாயிகள், பண்ணையார்கள் பங்கேற்கும் முத்தரப்புப் பேச்சுவார்த்தைகளை தி.மு.க. அரசு ஏற்பாடு செய்தது. 17 உடன்பாடு ஏற்பட்டது. இதனடிப்படையில் கூலி நிர்ணயம் செய்யப்பட்டது. கணபதியா பிள்ளை ஆணையத்தின் அறிக்கையும் 1969 செப்டம்பரில் வெளியானது. இதனை முழுமையாக தி.மு.க. அரசு ஏற்றுக் கொண்டது. ஆணையம் நிர்ணயித்த கூலியையும் விவசாய அமைப்புகள் ஏற்றுக் கொண்டன. இந்தப் பரிந்துரைகளின் அடிப்படையில் தமிழ்நாடு அரசு நியாயமான கூலிக்கான சட்டத்தை இயற்றியது. தொடக்கத்தில் இந்தச் சட்டம் கீழ்த்தஞ்சை மாவட்டத்துக்கு மட்டுமே உருவாக்கப்பட்டது. 1998 ஆம் ஆண்டு தி.மு.க. அரசு, இதனை மாநிலம் முழுமைக்கும் அமல்படுத்தியது.

1971 ஆம் ஆண்டு நில உச்சவரம்புச் சட்டத்தைத் திருத்த முதலமைச்சர் கலைஞர் எடுத்த முயற்சிக்கும் இந்தச் சம்பவம்தான் முக்கியமான காரணம் ஆகும்.

கோபாலகிருஷ்ணன் உள்ளிட்ட ஏழு பேருக்கு தலா பத்தாண்டுகள் சிறைத் தண்டனை தரப்பட்டது. ஆனால் சென்னை உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மேல்முறையீட்டு மனுவின் விசாரணையில் இவர்கள் விடுதலை செய்யப்பட்டார்கள். பிற்காலத்தில் கோபாலகிருஷ்ணன், கொலை செய்யப்பட்டார்.

இதுபற்றி கலைஞர் தனது 'நெஞ்சுக்கு நீதி'யில் எழுதி இருக்கிறார்... "கோபாலகிருஷ்ணன் என்ற நிலப்பிரபு வெண்மணி நிகழ்ச்சி நடைபெற்ற பல ஆண்டுகளுக்குப் பிறகு கொலையுண்டார் என்பதிலிருந்து வெண்மணியின் வெங்கொடுமைக்கு எப்படி பதில் கூறப்பட்டது என்பதையும் புரிந்து கொள்ளலாம்" என்று எழுதி இருக்கும் கலைஞரைத்தான் கிண்டல் அடிக்கிறார் ச.தமிழ்ச்செல்வன்.

"இந்தியாவில் கம்யூனிசம் பரவாமல் கம்யூனிஸ்ட்டுகளே பார்த்துக் கொள்வார்கள்" என்று பெரியார் சொன்னார். அதைத்தான் இன்று நாம் பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (22.7.2026) காலை, அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில், தமிழ்நாடு அனைத்து விவசாய சங்கங்களின் கூட்டு இயக்கத் தலைவர் ஈரோடு பி.கே.தெய்வசிகாமணி தலைமையில் தமிழ்நாடு காவிரி விசாயிகள் தலைவர் எல்.பழனியப்பன், கௌரவ தலைவர் எஸ்.ராமதாஸ், பொதுச்செயலாளர் என்.செந்தில்குமார் மற்றும் மாநில நிர்வாகிகள் சந்தித்தனர். அதுபோது துணைப் பொதுச்செயலாளர் முனைவர் க.பொன்முடி, உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், எம்.எல்.ஏ., அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, செய்தித் தொடர்பு தலைவர் டி.கே.எஸ்.இளங்கோவன் ஆகியோர் உடனிருந்தனர்.

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (22.7.2026) காலை, அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில், இலங்கை நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினரும் இலங்கைத் தமிழரசுக் கட்சி மூத்த தலைவருமான எம்.ஏ. சுமந்திரன் அவர்கள் மரியாதை நிமித்தமாக சந்தித்தார்.

'நீட்' தேர்வுக்கு எதிராகப் போராடிய

SFI மற்றும் DYFI அமைப்பினரை கைது செய்வதா ?

'Sofa Model' அரசுக்கு எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் கண்டனம்!

சென்னை, ஜூலை 24-

'நீட்' தேர்வுக்கு எதிராகப் போராடிய SFI மற்றும் DYFI அமைப்பினரை கைது செய்ததற்கு எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டிருப்பதாவது:-

சென்னை எழும்பூர் மற்றும் மதுரை தமுக்கம் பகுதிகளில் NEET தேர்வுக்கு எதிராகப் போராடிய SFI மற்றும் DYFI அமைப்பினரை காவல்துறை மூலம் வலுக்கட்டாயமாக கைது செய்யும் SofaModel அரசை வன்மையாகக் கண்டிக்கிறேன்.

CJP முன்னெடுப்பில் டெல்லியில் போராடும் இளைஞர்களுக்கு ஆதரவாக, தமிழ்நாட்டில் போராடுவோரை கைது செய்வது என்பது, NEET விஷயத்தில் ஆளுங்கட்சியின் இரட்டை வேடத்தையே காட்டுகிறது.

ஒன்றிய பா.ஜ.க. அரசுக்கு எதிரான போராட்டத்தைத் தனக்கெதிரான போராட்டமாகக் கருதி முடக்கும் இந்த அடக்குமுறையை, Sofa Model அரசு உடனே நிறுத்திக் கொள்ள வேண்டும். கைது செய்யப்பட்டவர்களை உடனடியாக விடுவிக்க வேண்டும்.

இவ்வாறு அவர் தமது முகநூலில் பதிவிட்டுள்ளார்.

தூத்துக்குடி முத்துக்களுக்கான புவிசார் குறியீடு எப்போது?

மக்களவையில் கழக நாடாளுமன்றக் குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி கேள்வி!

புதுடெல்லி, ஜூலை 24-

தூத்துக்குடி முத்துக்களுக்கான புவிசார் குறியீடு குறித்து தி.மு.க. நாடாளுமன்ற குழுத் தலைவர், தி.மு.க. துணை பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி நாடாளுமன்ற மக்களவையில் எழுத்து பூர்வமாக கேள்வி எழுப்பியுள்ளார்.

இதுகுறித்து அவர், எழுப்பிய கேள்வி வருமாறு:-

"தூத்துக்குடி முத்துக்களுக்கான புவி சார் குறியீடு (GI) விண்ணப்பத்தின் தற்போதைய நிலை என்ன?

புவிசார் குறியீடுகள் தொடர்பான பதிவகத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்டதா, பதிவு செய்யப்பட்டதா அல்லது நிலுவையில் உள்ளதா?

இந்த புவிசார் குறியீடு விண்ணப்பம் தாக்கல் செய்யப்பட்டதிலிருந்து இதுவரை எடுக்கப்பட்ட முக்கிய நடவடிக்கைகள் என்ன?

கடந்த ஐந்து ஆண்டுகளில் தமிழ்நாட்டிலிருந்து தாக்கல் செய்யப்பட்ட புவிசார் குறியீடு வேண்டி கொடுக்கப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை மற்றும் அவற்றின் தற்போதைய நிலை

என்ன?" என்று கேள்விகளை கேட்டிருந்தார் கனிமொழி கருணாநிதி.

இதற்கு பதிலளித்து வர்த்தகம் மற்றும் தொழில்துறை இணையமைச்சர் ஜிதின் பிரசாதா கூறியதாவது:-

"தூத்துக்குடி முத்து உற்பத்தியாளர் சங்கத்தின் சார்பில் 2025, டிசம்பர் 9 ஆம் தேதி தூத்துக்குடி முத்துக்கு புவிசார் குறியீடு கோரி விண்ணப்பம் தாக்கல் செய்யப்பட்டது.

இதன் அடிப்படையில் விண்ணப்பதாரர்களுக்கு 12 டிசம்பர் 2025 அன்று ஒரு முறைமைச் சரிபார்ப்பு அறிக்கை வழங்கப்பட்டது. தங்களுக்கு வழங்கப்பட்ட முறைமைச் சரிபார்ப்பு அறிக்கைக்கு விண்ணப்பதாரர் இணங்குவதற்கான ஒப்புதலை புவிசார் குறியீட்டுப் பதிவகம் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறது.

விண்ணப்பதாரரிடமிருந்து இணக்கம் கிடைத்தவுடன், புவிசார் குறியீடுகள் பதிவு மற்றும் பாதுகாப்புச் சட்ட விதிகளின் படி விண்ணப்பம் அடுத்த கட்ட நடவடிக்கைக்கு உட்படுத்தப்படும். கடந்த ஐந்து ஆண்டுகளில் தமிழ்நாட்டிலிருந்து 128 பொருள்களுக்கு புவிசார் குறியீடு கேட்டு விண்ணப்பங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. அவை பதிவு, முறைமை சரிபார்ப்பு அறிக்கைக்கு விண்ணப்பதாரர்களின் விளக்கம், ஆட்சேபங்கள் பற்றிய விசாரணை உள்ளிட்ட நிலைகளில் இருக்கின்றன" என்று பதிலளித்துள்ளார்.